தகர பந்தல், கதிரைகள், சில்வர் கப், பீங்கான் இன்னும் பல உபகரணங்களை வாடகைக்கு பெற நாடுங்கள்
"ஒளி இல்லம்"
210, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

For all Ceremonies
At your homes
Our Service available

OLI ILLAM
210, MAIN STREET,
(Near St. James Church)
JAFFNA.

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 23 திங்கட்கிழமை (08 – 11 – 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 345

## போர்க்கால இலக்கியத்துக்கு இலக்கணம் வகுத்தவர் புதுவை

### நூல் வெளியீட்டு வாழ்த்துரையில் தலைவர் புகழாரம்

யாழ்ப்பாணம், நவ. 8

கவிதை உலகில், போர்க்கால இலக்கியத்துக்கு இலக்கணம் வகுத்துக் கொடுத்த பெருமை புதுவை இரத்தினதுரையைச்சாரும்.

— இவ்வாறு புகழாரம் சூட்டியுள்ளார் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன்.

கவிஞர் புதுவை இரத்தினதுரையின் "நினைவழியா நாட்கள்" கவிதை நூல் தொகுப்பின் வெளியீட்டு விழா நேற்று மாலை நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்றது.

அந்த நூலுக்கு அனுப்பி வைத்த வாழ்த்துரையிலேயே தலைவர் பிரபா மேற்படி புகழாரத்தைச் சூட்டியுள்ளார்.

தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன் தலைமையில்



வெளியீட்டுவிழா நிகழ்வுஇடம் பெற்றது.

"அங்கு தேசியத் தலைவரின் வாழ்த்துச் செய்தியை அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. ப. தமிழ்ச்செல்வன் வாசித்தார்.

தலைவர் பிரபா தமது வாழ்த்துரையில் தெரிவித்திருப்பதாவது:–

காலத்தின் மூச்சாக வாழ்வியக்கம் அசைகிறது. அந்தக் காலத்தையும், அந்தக் காலமாக விரியும் வாழ்வையும், அந்த வாழ்வாக அவிழும் மனித இன்னல்களையும், விளைச்சல்களையும் நுட்பமாகச் சித்திரிக்கும் கலை இலக்கியங்கள் உன்னதமானவை.

தான் பிறந்த மண், தான் வளர்ந்த சூழல் தான் உறவு கொள்ளும் சமூகம், தான் வாழும் காலம் என்ற ரீதியில் வாழ்க்கையே ஒரு கலைஞனது

(3 ஆம் பக்கம் பார்க்க)

## பண்ணாகத்தில் பலாலி ஷெல்

சுழிபுரம், நவ. 8

நேற்றுக் காலை 8 மணியளவில் பலாலி இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட இரு ஷெல்கள் பண்ணாகத்தில் விழுந்து வெடித்ததில் இரு வீடுகள் சேதமடைந்தன. வீட்டில் இருந்தோர் மயிரிழையில் உயிர்தப்பினர்.

(உ-15-28)

## புத்தளத்தில் தேடுதல்

யாழ்ப்பாணம், நவ. 8

புத்தளத்தில் உள்ள உடப்பு கிராமம் நேற்று முன்தினம் அதிகாலை 4 மணி முதல் சுமார் ஐந்து மணி நேரம் பொலிஸாராலும் இராணுவத்தினராலும் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

வீடு வீடாகத் தேடுதல் நடத்திய படையினர் மக்களை அங்குள்ள காளி கோவிலுக்கு செல்லுமாறு பணித்தனர். மூன்று தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

(உ-5)

## வடக்கு படை உயர் அதிகாரிகள் திடீர் லட்சாதிபதிகளாகினர்!

### லஞ்ச ஆணையாளருக்கு முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், நவ. 8

வடக்கு – கிழக்கில் பணிபுரியும் இராணுவ பொலிஸ் அதிகாரிகள் திடீர் லட்சாதிபதிகளாகி உள்ளனர். லஞ்சமாகப் பெற்ற அந்தப் பணத்தை முதலீடாக்கிச் சிலர் பஸ் முதலாளிகள் ஆகியுள்ளனர்.

இந்த அதிர்ச்சித் தகவலை லஞ்ச ஆணையாளர் திருமதி நெலும் கமகே வெளியிட்டிருக்கிறார்.

இவர்கள் லஞ்சம் வாங்கிப் பெரும் பணம் சேர்ப்பது மட்டுமன்றி அன்பளிப்பு என்ற பெயரில் வாகனங்கள், காணிகள், ஆடம்பரப் பொருள்களையும் பெற்றிருக்கிறார்கள்.

வடக்கே கொண்டு செல்வதற்கு தடை விதிக்கப்பட்ட பொருள்களுக்கு போலி அனுமதிப் பத்திரங்களை வழங்கியே பலரும் பணம் தேடி திடீர் செல்வந்தர்களாகி இருக்கிறார்கள் என்றும் லஞ்ச ஆணையாளர் தெரிவித்திருக்கிறார்.

வடக்கு—கிழக்கில் பணிபுரியும் இராணுவ, பொலிஸ் உயர் அதிகாரிகளின் லஞ்ச நடவடிக்கைகள் குறித்து ஆயிரக்கணக்கான முறைப்பாடுகள்-குற்றச்சாட்டுக்கள்—தமக்குக் கிடைத்திருப்பதாகவும்—

அவை சம்பந்தமாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் திருமதி நெலும் கமகே 'திவயின' பத்திரிகைக்குத் தெரிவித்திருக்கிறார்.

## புலிகளின் புதிய திட்டம்: சவப்பெட்டியிலும் குண்டு!

### சிங்கள வார இதழ் கூறுகிறது

கொழும்பு, நவ. 8

இதுவரை காலமும் கார்க்குண்டுகளையும் பார்சல் குண்டுகளையும் தற்கொலைத் தாக்குதல் குண்டுகளையும் பயன்படுத்தி வந்த விடுதலைப் புலிகள் இயக்கம் நவீன பாணிகளில் — வேறு யுக்திகளைக் கையாண்டு குண்டுகளை வெடிக்க வைக்க ஆயத்தமாகியுள்ளனர்.

இது குறித்து பாதுகாப்பு வட்டாரங்களுக்குத் தகவல் கிடைத்திருப்பதாக "திவயின" சிங்கள வார இதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

இனிமேல் சவப்பெட்டிகளிலும், சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களிலும் வெடிகுண்டுகளைப் பொருத்தி புலிகள் அவற்றை வெடிக்க வைக்கக் கூடும் என்று அச்செய்தியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

(உ-9)

## சபாநாயகர் முஹம்மது அறிவிப்பு

# இராணுவ முயற்சிகள் பயன்தரா!

# புலிகளுடன் பேச யாழ். செல்வேன்

## தெரிவுக்குழு அறிக்கையும் பிரயோசனமற்றது என்கிறார்

கொழும்பு, நவம்பர் 8

வடக்கு – கிழக்குப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு ஏற்பட முடியாது; இராணுவ முயற்சிகள் பயன்தரா; இந்நிலையில் புலிகளுடன் பேசுவதற்காக நான் யாழ்ப்பாணம் செல்லவிருக்கின்றேன்.

— இவ்வாறு ஸ்ரீலங்கா நாடாளுமன்ற சபாநாயகர் அல்ஹாஜ் எம்.எச். முஹம்மது அறிவித்திருக்கிறார்.

தமிழ்க் கட்சிகள் எதுவும் கலந்துகொள்ளாத நாடாளுமன்றத் தெரிவுக் குழு, நாளை சமர்ப்பிக்க இருக்கும் அறிக்கையும் எதுவித பயனுமற்றது என்றும் அவர் சொன்னார்.

சபாநாயகர் முஹம்மது பி.பி.ஸியின் சிங்கள, தமிழ் சேவைகளுக்கு அளித்த பேட்டிகள் நேற்று ஒலிபரப்பாகின. அப்பேட்டிகளில் அவர் தெரிவித்ததாவது:–

"இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த தெற்கில் உள்ள அரசியல் கட்சிகள் எவையும் முயற்சி எடுக்காது இருக்கின்றன. இதனைக் கண்டிக்கின்றேன்".

இனப்பிரச்சினையைக் கண்டிப்பாகத் தீர்க்க வேண்டும். இது என் சொந்தக் கருத்து. இல்லாவிட்டால் இலங்கைக்கே பெரும் கஷ்டம் ஏற்படும். தமிழருக்கு மட்டுமல்ல முஸ்லிம்களுக்கும் சிங்களவருக்கும் கூட கஷ்டங்கள் வரும் என்று உணர்ந்துள்ளோம்.

ஆகையால் இப்பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வு காணுவது எல்லா மக்களின் கடமையாகும். இந்த நம்பிக்கையுடன் திரு. பிரபாகரனைச் சந்திப்பதற்காக யாழ்ப்பாணம் செல்லத் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளேன்.

எப்போது செல்வேன் என்று என்னால் சொல்ல முடியாது.

(2 ஆம் பக்கம் பார்க்க)

## கடத்தப்பட்ட பின் ராகமவில் வைத்து விடுதலையான 3தமிழரையும் சிங்களவர்கள் தாக்கினர்

கொழும்பில் இலக்கத் தகடு இல்லாத வாகனத்தில் வந்தவர்களால் கடத்தப்பட்டு சுமார் இருவார காலம் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் ராகம பகுதியில் வைத்து விடுவிக்கப்பட்ட மூன்று தமிழ் இளைஞர்கள் அப்பகுதி மக்களால் நையப்புடைக்கப்பட்டனராம்.

ஒக்டோபர் மாதம் 17 ஆம் திகதி கடத்தப்பட்ட இவர்கள் கடந்த இரண்டாம் திகதி ராகமவில் மரங்கள் அடர்ந்த பகுதியில் கண்கள் கட்டப்பட்ட நிலையில் விடுவிக்கப்பட்டனர் என்பது தெரிந்ததே.

விடுவிக்கப்பட்ட இளைஞர்கள் மூவரும் கண் கட்டை அவிழ்த்துக் கொண்டு — தெரியாத இடத்தில் — சிங்களக் கிராமம் ஊடாக வந்து கொண்டிருந்தபோது அங்கிருந்த மக்கள் "புலிகள் புலிகள்" என்று கூக்குரல் இட்ட

(2 ஆம் பக்கம் பார்க்க)

### மூச்சர்த்தி முரலி



அப்ப மரத்தாலை விழுந்தவனை மாடு மிதிச்ச கதை மாதிரி எண்டு சொல்லுங்கோ...!

## கடல் வலய தடைச் சட்டம் மற்றும் பொருள்கள் மீதான தடை: தளர்த்துவது பற்றி ஆராய்வு?

கொழும்பு, நவ. 8

வடபகுதிக்கு பொருள்களை எடுத்துச் செல்வதற்கு விதிக்கப்பட்ட தடையை தளர்த்துவது குறித்து இலங்கை அரசு பரிசீலனை செய்து வருவதாக இந்திய வானொலி நேற்று அறிவித்தது.

மன்னார் முதல் திருகோணமலை வரையான கடல் பகுதியில் படகுகள் போக்குவரத்துக்கு விதிக்கப்பட்ட தடையை விலக்குவது பற்றியும் அரசு பரிசிலிப்பதாக இந்தியச் செய்திகள் தெரிவித்தன.

(3 ஆம் பக்கம் பார்க்க)

## காங்கேசன் சிமெந்து ஆலை மூடாதிருக்க ஆலோசனை

யாழ்ப்பாணம், நவ. 8

காங்கேசன் சிமெந்து ஆலையை மூடாமல் இருப்பதற்கு வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சசர் திரு. சிறிசேன கூரேக்கு சில ஆலோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

காங்கேசன் சிமெந்து பொதுத் தொழிலாளர் சங்கத்தினரே இந்த ஆலோசனைகளை அமைச்சருக்குச் சமர்ப்பித்தனர்.

தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தலைவர் திரு. க. நடராசா தலைமையில் கொழும்பில் அமைச்சர் கூரேயை அண்மையில் சந்தித்துப் பேச்சு நடத்தினர்]

இச்சந்திப்பின் போது, ஆலையை மூடாமல் ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்குவதற்குரிய பணத்தைப் பெறு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வாரியார் காலமானார்

சென்னை, நவ. 8

பிரபல தமிழறிஞரும் சமயப் பேச்சாளருமான திருமுருக கிருபானந்தவாரியார் (87 வயது) நேற்றுக் காலமானார்.



பம்பாயில் இருந்து சென்னைக்கு விமானத்தில் வந்து கொண்டிருந்தபோது அவருக்கு மரணம் சம்பவித்தது.

விமானம், சென்னை விமான நிலையத்தை வந்தடைந்ததும் அவரின் மரணச் செய்தி வெளியாகியது.

சில தினங்களுக்கு முன்னர் ஜேர்மன் மற்றும் சுவிட்சர்லாந்து நாடுகளில் அருளுரைகளை நிகழ்த்தச் சென்றிருந்தபோது வாரியார் லண்டனில் மூச்சுத் திணறலுக்கு உள்ளானார். லண்டன் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்ற பின்னர் அவர் பம்பாய் வழியாக சென்னை திரும்ப ஏற்பாடாகியிருந்தது.

வாரியார் யாழ்ப்பாணம் உட்பட இலங்கைக்கு பல முறை வந்து அருளுரைகள் நிகழ்த்திச் சென்றுள்ளார். கடந்த சில மாதங்களுக்கு முன்னரும் அவர் கொழும்பில் அருளுரைகள் நிகழ்த்தியிருந்தார்.

(ஓ-எ)

# சூடாநாட்டைப் பிடிக்க முயன்றால் பேச்சுக்கான கதவுகள் மூடப்படும்

## தலைவர் பிரபா ஜனாதிபதிக்குத் தகவல்

யாழ்ப்பாணம், நவ. 8

யாழ். குடாநாட்டின் மீது தாக்குதல் நடத்தி அதனைக் கைப்பற்ற அரச படைகள் முயற்சித்தால் சமாதானப் பேச்சுக்கான கதவுகள் அனைத்தையும் மூடிவிட தீர்மானித்திருப்பதாக "லங்காதீப" பத்திரிகையாளருக்கு கூறும்படி தலைவர் பிரபாகரன் என்னிடம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் [illegible] வந்து திரும்பிய "லங்காதீப" செய்தியாளர்களிடம் விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இவ்வாறு தெரிவித்தார் என்று அப்பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

புலிகளின் இந்த முடிவு தலைவர் பிரபாகரனால் ஸ்ரீலங்கா ஜனாதிபதி மற்றும் அரசின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அப்பத்திரிகைச் [illegible] ருக்கிறது.

[illegible] யாழ்ப்பாணத்தை நோக்கி நகர முடியும் என்று இராணுவம் நம்புவதாகத் தெரியவந்திருக்கிறது. லட்சக்கணக்கான அப்பாவி மக்களின் சடலங்களின் மீதுதான் யாழ். நகரைப் பிடிக்க அரச படைகள் முன்னேற வேண்டும்.

யுத்தத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக மேலும் கோடிக்கணக்கான பணத்தைச் செலவிட அரசு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது.

மேலும் பல வருடங்களுக்கு யுத்தத்திற்கு முகம் கொடுக்கக்கூடிய சக்தி புலிகளிடம் உள்ளது.

—இவ்வாறு அன்ரன் பாலசிங்கம் தெரிவித்ததாக அச்செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

(உ-9)

## ஓடிவந்த மாடுகளை கண்டு மிரண்ட படையினர்!

### கண்டபடி துப்பாக்கிப் பிரயோகம்

யாழ்ப்பாணம், நவ. 8

மாடுகள் ஓடி வருவதைக் கண்டு வெருண்ட படையினர் சரமாரியான துப்பாக்கிச் சூட்டினை நடத்தினர்.

கடந்த வியாழனன்று நொச்சிமோட்டை பாலத்தடியில் இச் சம்பவம் இடம் பெற்றது.

இராணுவ முகாம் பக்கமாக மாடுகள் ஓடி வருவதைக் கண்டு, முன்னணிக் காவலரண்களில் இருந்த படையினர் கண்டபடி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

அருகில் உள்ள ஏனைய இராணுவ முகாம்களை எச்சரிக்கும் வகையில் அவர்கள் அபாய ஒலியும் எழுப்பினர்.

இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டால் நொச்சிமோட்டைப் பகுதியில் பயணிகள் பதற்றமடைந்தனர்.

(உ-5)

தமிழீழத்தை விற்றவர் வரிசையில்
உன் பெயர் இருக்கக் கூடாது
தமிழீழத்தைப் பெற்றவர் வரிசையில்
உன் பெயர் இருக்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

5 K. V. மின்வலு வுள்ள ஜெனரேற்றர் ஒன்றும் டீசல், Panasonic V. D. O. Mixer ஒன்றும், (WJ-MX-10) விற்பனைக்குண்டு. பார்வையிடும் நேரம் காலை 9 தொடக்கம் 12 மணிவரை. ரெலிகோணர், நவீன சந்தை, (மேல்மாடி) சாவகச்சேரி. (6583)

பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஒழுங்கை திருநெல்வேலி வடக்கில் சந்தைக்கு மிக அருகாமையில் சகல வசதியும் கொண்ட இரண்டு பரப்பு காணியும், வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி வனிதாதேவி விவேகானந்தம், செம்பாட்டுலேன், பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (27931)

8ஸ்ரீ ஒக்ஸ்போர்ட் கார் விற்பனைக்கு உண்டு (டீசல்) விலாசம்: குட்டி, முடமாவடிச் சந்தி, நல்லூர். (27939)

## இந்தியா ருடே

இந்தியா ருடே ஆண்டுமலர் 93-94 சொற்ப பிரதிகள் கைவசம், தீபாவளி வாழ்த்து மடல்கள் மொத்த விற்பனையாளர் மகிலன் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். ஸ்ரீகாந் புத்தகசாலை, 165, பவர் கவுஸ் றோட், யாழ்ப்பாணம். (சி-6523)

## ஆங்கிலக் கட்டுரைகள்

105, Model Compositions in English. 105 தரமான ஆங்கிலக் கட்டுரைகள், G. C. E., N. C. E. மற்றும் உயர்கல்வி மாணவர்களுக்குரிய நூல். ஆக்கியோன்: த. ந. பஞ்சாட்சரம், விலை ரூபா 125/- கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (27924)

## தேவை

சியாக்காய் பவுடர், பற்பொடி, நீலம் ஒட்டுவதற்கு பெண் பிள்ளைகளும், சைக்கிளில் வியாபாரம் செய்யக் கூடிய ஆண்களும் தேவை. தொடர்பு: ஜெயலட்சுமி இன்டஸ்ரீஸ், பாடசாலை வீதி, ஆறுகால்மடம். (27933)

## ஆட்கள் தேவை

சுவீற்ஸ், உள்நாட்டு, வெளிநாட்டு உணவு வகைகள் சமைக்கத் தெரிந்தவர்கள் நேரில் வரவும். றிக்கோ சுவீற் அன் கிறீம் ஹவுஸ், 370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (6584)

## திருத்தவேலைகள்

உத்தரவாதத்துடன் மணிக்கூடுகள், றேடியோக்கள் திருத்தப்படும். உதிரிப்பாகத்திற்காக மணிக்கூடுகள் வாங்கப்படும். டில்கா வாச் & றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி றோட் (வானவில் அருகில்). கிளை: கண்டி றோட், சாவகச்சேரி. (சி-6176)

## தவறிவிட்டது

06 – 11 – 1993 இரவு கிளாலியில் இருந்து யாழ்ப்பாணம் வந்த மினி பஸ்ஸில் VTR மினிபஸ் உரிமையாளர் த. ஜெயக்குமாரின் அடையாள அட்டை (இல. 661351080V) மற்றும் சில பொருள்களுடன் பிறவுண் நிற போர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து யாழ். மினிபஸ் நிலையத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (27943)

# எம். பி. பதவியை அனுரா ராஜினாமா

அனுரா பண்டாரநாயக்கா சுதந்திரக்கட்சி சார்பிலான தமது எம். பி. பதவியை ராஜினாமாச் செய்துவிட்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

4 – 11 – 1993 திகதியிடப்பட்ட அவரது ராஜினாமாக் கடிதம் நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது.

திரு. பண்டாரநாயக்கா கடந்த சில வாரங்களுக்கு முன்னரே கட்சியில் இருந்து ராஜினாமாச் செய்திருந்தார் என்பது தெரிந்ததே.

---

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி விரிவுரைகள்

# கல்வியாண்டு 1994/95

பின்வரும் பாடநெறிகளுக்கான விரிவுரைகள் 05 - 12 - 1993 இல் ஆரம்பமாகின்றன.

- கலைமாணி B. A.
- விஞ்ஞான மாணி B. Sc. (புள்ளி விவரவியல்)

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

1993 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 02 – 12 – 1993

விண்ணப்பப் படிவத்தினையும் விவரத் திரட்டினையும் ரூபா 10 செலுத்தி நேரில் / தபால் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

விவரங்களுக்கு:

உதவிப் பதிவாளர்,
**பட்டப் படிப்புகள் கல்லூரி,**
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

★ கடந்த 15 வருடங்களாக வெளிவாரிப் பட்டப் படிப்புகளுக்கெனத் தனித்துவமாக இயங்கும் ஒரேயொரு நிறுவனம் யாழ். நகரில் இதுவே.

[சி-6503]

---

புங்குடுதீவு - நயினாதீவு
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

# முதலாவது கிளைக்குழுக் கூட்டம்

பின்வரும் திகதிகளில் முதலாவது கிளைக்குழுக் கூட்டம் இல. 201/1, 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சங்கத் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது. சகல கிளைக் குழு உறுப்பினர்களும் தவறாது சமுகம் தரும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

10 - 11 - 1993 ஆம் திகதி புதன்கிழமை:

| | | |
|---|---|---|
| 1ஆம் கிளை | முற்பகல் | 9-00 மணிக்கும் |
| 2ஆம் கிளை | முற்பகல் | 10-30 மணிக்கும் |
| 3ஆம் கிளை | முற்பகல் | 11-30 மணிக்கும் |
| 5ஆம் கிளை | பிற்பகல் | 2-00 மணிக்கும் |
| 6ஆம் கிளை | பிற்பகல் | 3-30 மணிக்கும் |

12 - 11 - 1993 ஆம் திகதி வெள்ளிக்கிழமை:

| | | |
|---|---|---|
| 7ஆம் கிளை | முற்பகல் | 9-00 மணிக்கும் |
| 9ஆம் கிளை | முற்பகல் | 10-30 மணிக்கும் |
| 10ஆம் கிளை | முற்பகல் | 11-30 மணிக்கும் |
| 12ஆம் கிளை | பிற்பகல் | 2-00 மணிக்கும் |
| 13ஆம் கிளை | பிற்பகல் | 3-30 மணிக்கும் |

14 - 11 - 1993 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை:

| | | |
|---|---|---|
| 14ஆம் கிளை | முற்பகல் | 9-00 மணிக்கும் |
| 15ஆம் கிளை | முற்பகல் | 10-30 மணிக்கும் |
| 16ஆம் கிளை | முற்பகல் | 11-30 மணிக்கும் |
| 19ஆம் கிளை | பிற்பகல் | 2-00 மணிக்கும் |
| 20ஆம் கிளை | பிற்பகல் | 3-30 மணிக்கும் |

செயலாளர்,
புங். நயி. பல. நோ. கூ., சங்கம்.

[சி-6332]

---

# ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 27 — 10 — 1944

உதிர்வு: 19 — 10 — 1992

## திருமதி புவனேஸ்வரி சின்னத்துரை

ஆண்டுத் திதி
08 - 11 - 1993

எமது இல்ல விளக்கே, ஈடில்லா கற்பகமே, ஒப்பற்ற மாதாவே! அம்மா, எங்கள் கண்கண்ட தெய்வமே! உன்னைப் போல் ஒரு குடும்பத் தலைவியைக் காண்பது அரிதிலும் அரிது. உனை நாடி எவர் வந்திடினும், மனங்கோணாது உதவிடும் உத்தமியே! உனை இழந்து தவித்திடும் உன் குடும்பத்தார் உனக்கு முத்திப்பேறு கிடைத்திட தினமும் வேண்டுகிறோம்.

தங்களின் பிரிவால் துயருறும்;
கணவன், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், தாய், தந்தையர், மருமகள், சகோதரிகள், பெறாமக்கள்.

ஊழத்தம்பி,
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

---

# தனுஸ்ருடியோ

மங்கள நிகழ்வுகளை
சிறப்பாகப் படுத்தக் கூடிய
கலர், கறுப்பு, வெள்ளை படங்களை
மற்றும்
- பாஸ்போர்ட் சைஸ்
- அடையாள அட்டை
- தே. அ. அட்டை

இன்னும் பல அளவுகளில் எடுத்துக் கொள்ள

## தனு ஸ்ருடியோ

கேணியடி ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு.
(பள்ளத்தடி)
(காந்தி முகுந்தன் தூபிக்கு சமீபமாகவுள்ள ஒழுங்கை, குளப்பிட்டி ஆனைக்கோட்டை வீதி)

[27945]

---

அரிய சந்தர்ப்பம்!

## தீபாவளி மலிவு விற்பனை

நவம்பர் 1ஆம் திகதி முதல்
12 ஆம் திகதி வரை

சகலவிதமான
கைக்கடிகாரங்கள், சுவர்மணிக்கூடுகள்
முதலியன மலிவு விலையில்
பெற்றுக் கொள்ளலாம்.

## அல்டி

269/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-6516)

---

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்
மடப்பள்ளி வேலைக்கு

## பரிசாதகர் தேவை

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் மடப்பள்ளி வேலை செய்ய சிவப்பிராமண குலத்தவர் ஒருவர் தேவை. முன் வேலை செய்த ஆலய பரிபாலன சபையிடம் பெற்ற நற்சாட்சிப்பத்திரத்துடன் வெகு விரைவில் ஞாயிற்றுக்கிழமைகளில் மு. ப. 10-12ற்கு இடையில் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயிலில் சந்திக்கவும்.

வேலை ஒழுங்குகள், சம்பளம் ஆகியவை பற்றி நேரில் பேசி முடிவு எடுக்கப்படும்.

ச. தேவதாசன்
தர்மகர்த்தா.

(27914)

---

# ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 17 — 08 — 1931

விண்ணில்: 08 — 11 — 1992

## செபஸ்ரியான் மாரன்ஸ்

(அவுட்புட் மோட்டார் மெக்கானிக்)

நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை;
வரப்போகிறதையே நாடித்தேடுகிறோம்.
(எபி. 13:14)

கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்.

பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர் கொண்டுபோக, மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம்.

(I தெசலோனி 4:16, 17)

மனைவி, பிள்ளைகள்
மற்றும் குடும்பத்தினர்.

திருமதி செபஸ்ரியான் மமான்ஸ்,
தம்பசிட்டி,
பருத்தித்துறை.

(27909)

---

# இரா[illegible] முயற்சிகள்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அ[illegible] அவர்கள் [illegible] வித்து அறிவி[illegible] நான் போகத் தயார்.

கேள்வி: தெற்கில் உள்ள அரசியல் கட்சிகள் [illegible] தொண்டமானின் சமாதான முயற்சிகளையே வரவேற்கவில்லை. உங்களின் முயற்சிக்கு அரசாங்கமோ, தெற்கில் உள்ள அரசியல் கட்சிகளோ ஆதரவு வழங்குமா?

முஹம்மது: சபாநாயகர் என்ற முறையில் தான் நான் போகிறேன். பொதுவாக எனக்கும் அரசாங்கத்துக்கும் சம்பந்தமில்லை. நாடாளுமன்றத்துடன்தான் எனக்குச் சம்பந்தம் இருக்கிறது.

ஆகையால் அங்கே போய் முன் நிபந்தனை இன்றி பேச்சுவார்த்தையை நடத்துவேன். அதற்காகத்தான் நான் அங்கு போகின்றேன். அதற்குப் பிறகு பார்க்கலாம் — என்ன முடிவு என்று.

கேள்வி: இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை, பயங்கரவாதப் பிரச்சினை தான் உள்ளது. என்று ஜனாதிபதி விஜேதுங்கா அடிக்கடி கூறி வருகிறாரே! அதுபற்றி உங்கள் கருத்து என்ன?

முஹம்மது: அது பற்றி என்னால் ஒன்றும் கூறமுடியாது. கருத்துச் சொல்ல முடியாது. பொதுவாக இது அரசியல் தீர்வு காணப்படவேண்டிய ஒரு பிரச்சினையாகும். இந்த நோக்கத்துடன்தான் அங்கு செல்லவுள்ளோம் அங்கு போய் ஆலோசித்த பின்னர் தான் மற்ற விஷயங்களைக் கூறமுடியும்.

கேள்வி: விடுதலைப் புலிகள் உங்களை வரும்படி அழைத்தால் நீங்கள் நிச்சயம் அங்கு போவீர்களா?

முஹம்மது: கண்டிப்பாகப் போவேன். போக நான் தயார். நாங்கள் எல்லாரும் மனிதராக இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும்.

நான் அங்கே போய் திரு. பிரபாகரனுடன் பேசினால் நல்ல முடிவு எடுக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.— என்று சபாநாயகர் தெரிவித்தார். (உ-6)

---

# விடுதலையான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படி அவர்களைத் தாக்கினராம்.

தமிழ் இளைஞர்களைக் கடத்தியோர் அவர்களை தாங்கள் விடுவிப்பது குறித்து நாகம பொலீஸாருக்கு ஏற்கனவே தகவல் தெரிவித்திருந்தனர் என்றும்—

ஆனால் பொலீஸார் சம்பந்தப்பட்ட இடத்துக்குச் செல்ல முன்னரே இளைஞர்கள் நையப்புடைக்கப்பட்டு விட்டனர் என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

---

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க

## விளையாட்டுக் கழகம் (R.D.S)

நடத்தும்
யாழ். விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான
11 பேர் கொண்ட விலகல் முறையிலான

## உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள்

வெற்றி பெறும் கழகத்திற்கு லெப்- கேணல் மதி ஞாபகார்த்த சுற்றுக் கேடயம் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி:- 20—11—1993
விண்ணப்பக் கட்டணம்:- 100 ரூபா
விண்ணப்பப் படிவம் பெறும் இடம்:-

நிரூசன்ஸ்,
மல்லாகம் சந்தி, மல்லாகம்.

ரஞ்சனாஸ் புடைவை மாளிகை,
இல. 4, மத்திய சந்தை, சுன்னாகம்.

(6717) — விளையாட்டுக் குழு.

---

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் சின்னத்தம்பி இராமநாதன்

(மஞ்சத்தடி - இணுவில்)

யாழ். கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலை ஆசிரியர் திரு. இ. தயானந்தன் அவர்களின் தந்தையார் சி. இராமநாதன் அவர்களின் மறைவையிட்டு எமது பாடசாலைச் சமூகம் தனது ஆழ்ந்த துயரத்தையும், அனுதாபத்தையும் அவரது குடும்பத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கின்றது.

மாணவர், ஆசிரியர், அதிபர்,
பாடசாலை அபிவிருத்திச் சபையினர்.

கோண்டாவில். (27949)

---

# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு: 30 — 07 — 1959

உதிர்வு: 10 — 11 — 1990

அமரர்
## கந்தையா வரதராசன்

திதி 8 - 11 - 93

அந்தோ பரகதியடைந்த எம் தந்தையே!
இந்த மாநிலத்தில் எம்மைவிட்டுப் பிரிந்தீரே!
பாசமுடன் பகிர்ந்தளித்த பற்றுகளை
பாதியிலே மறந்து நீர் சென்றதேனோ.

காலம் வருமுன்னரேயே
காலன் வந்து குறுக்கிட்டதேனோ!

உங்கள் ஆன்ம ஈடேற்றத்திற்காக என்றும் நினைந்து பிரார்த்திக்கும்

அன்பு மனைவி, பிள்ளைகள்.

எச்சாட்டி,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

(27950)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

## கப்பல் தாமதம்

கொழும்பிலிருந்து கப்பல் மூலம் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வருவதில் பெரும் காலதாமதம் ஏற்படுகிறது. காரணம் கால நிலைமை அல்ல. அரசாங்கப் படையினர் துறைமுகத்தில் சோதனை என்ற பெயரில் நடத்தும் கெடுபிடிகளே!

ஒரு பொதியை ஒருமுறை சோதித்தால் போதாதாம். சோதனைக் கடமைக்கு அமர்த்தப்பட்ட கடற்படை, இராணுவ, பொலீஸ் அதிகாரிகள் ஆகிய முத்தரப்பாரும் சோதிக்கிறார்கள். ஒருவர் கண்ணுக்குத் தெரியாத கடத்தல் பொருள் அடுத்த இருவரில் ஒருவர் கண்ணிலாவது பட்டுவிடும் என்ற நம்பிக்கை போலும்! அதனால் ஒரு பொதி மூன்று தடவைகள் கிண்டிக் கிளறப்படுகின்றது.

இதன் காரணமாக கப்பலில் ஏற்றப்படுவதற்கெனத் துறைமுகத்துக்கு எடுத்துச் செல்லப்படும் பொருள்கள் நீண்ட நாட்களாக சோதனையைக் காத்துத் தேங்கிக் கிடக்கின்றன. கப்பல்களும் வீணே துறைமுகத்தில் சோம்பி நிற்கின்றன. பொருள்களை ஏற்றுவதற்காக ஒரு கப்பல் மூன்று வாரங்கள் வரை காத்து நிற்கவேண்டியுள்ளது.

இந்தச் சோதனைக் கெடுபிடியால் கப்பல்களில் ஏற்றி வரப்படும் பொருள்களின் அளவும் குறைந்து வருகிறது. கப்பலின் கொள்ளளவில் அனேகமாக அரைவாசியே வந்து சேர்கிறது.

ஏற்கனவே, கடந்த மூன்று வருடங்களாக, யாழ்ப்பாண மக்களின் மாதாந்த உணவுத் தேவையில் மூன்றில் ஒரு பங்கையே அரசு கப்பல்களில் அனுப்பி வைக்கிறது. அவ்வாறு பற்றாக்குறையான பொருள்களை அனுப்பிவிட்டு, யுத்தம் நடந்தாலும் தமிழ் மக்களுக்கு உணவு போடுகிறோம் என்று உலகத்துக்குக் கணக்குக் காட்டுகிறது.

சோதனை காரணமாகக் கப்பல்களில் அரைவாசிப் பொருள்களே ஏற்றிவரப்படின், இப்போது யாழ்ப்பாண மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களில் ஆறில் ஒரு பங்கே கப்பலில் வந்து சேரும் என்பது கணக்கு.

கப்பலில் பொருள்களை ஏற்றுவதில் தாமதம் செய்து, அளவை அரைவாசியாக்குவதுடன் மட்டும் அரசு நிற்கவில்லை. யாழ்ப்பாணத்திற்கு பொருள்களை எடுத்து வருவதற்கு அனுமதி வழங்குவதிலும் வெளிப்படையாகத் தெரியாத விதத்தில் காரிய மாற்றுகிறது.

முன்னர் கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் அனுமதி வழங்கிய போது, விண்ணப்பிக்கப்படும் பொருள்களின் அளவை பொறுப்பான அதிகாரி வெட்டினால் அல்லது குறைத்தால் மேலதிகாரியிடம் எடுத்துச் சென்று நிலைமையை விளக்கி அனுமதி பெறலாம். இப்போது அந்த நிலை இல்லை. பொறுப்பான அதிகாரி விண்ணப்பப் பத்திரத்தில் வெட்டினால் அல்லது குறைத்தால் அவ்வளவு தான். அப்பீல் இல்லை. இரண்டாம் பேச்சுக்கும் இடமில்லை. மேலதிகாரி எவரும் இல்லை.

மொத்தத்தில் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்படும் பொருள்களைக் குறைப்பது என்பது வடபகுதி மக்கள் மீதான பொருளாதாரத் தடையை மேலும் இறுக்குவதேயாகும்.

யுத்தம் நடத்தி தமிழ் மக்களின் விடுதலை உணர்வை மழுங்கடிக்க முடியவில்லை. எனவே அறிவிப்பு, உத்தரவு என்று எதுவும் இல்லாமல் நடைமுறையிலேயே வெகு "நைஸாக" பொருளாதாரத் தடை இறுக்கப்படுகிறது. இது இராணுவப் போருக்கு உறுதுணையாக விளங்கும் உளவியல் போர் வடிவம்.

இங்கே விழிப்படைய வேண்டியவர்கள் தமிழ் மக்கள். உள்ளூர் உற்பத்தியைப் பெருக்குவதில் மேலும் கவனம் எடுக்க வேண்டும். பதுக்கல், கள்ளச்சந்தை ஆகியவற்றுக்கும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

சொந்த நலனைக் கருத்திற் கொண்டு

# தமிழர் ஆதரவுப் பாதையிலிருந்து விலகிச் செல்கிறார் கருணாநிதி

## வை. கோபாலசாமி குற்றச்சாட்டு

சென்னை, நவ. 8

தி.மு.க. தலைவர் கருணாநிதி தமது சொந்த நலன்களைக் கருத்திற்கொண்டு தமிழர்களுக்கு ஆதரவான பாதையில் இருந்து விலகிச் செல்கிறார்.

தி.மு. கழக எம்.பியான வை. கோபாலசாமி விழுப்புரத்தில் நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் பேசியபோது முன்கண்டவாறு குறிப்பிட்டார்.

கடந்த ஜனவரிமாதம் இந்தியக் கடலில் விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான திரு.கிட்டு மரணமானதற்கு இந்திய கடற்படையே காரணம் என்பதை கருணாநிதியும் அவரது ஆதரவாளர்களும் ஏன் கண்டிக்கவில்லை?

கிட்டுவின் மரணத்துக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக தி.மு.கவினர் ஏன் அனுதாபக் கூட்டத்தை நடத்தவில்லை?

—இவ்வாறு திரு. கோபாலசாமி அங்கு கேள்வி எழுப்பினார்.

இன்னொரு பொதுக் கூட்டத்தில் பேசிய திரு. கோபாலசாமி இலங்கையில் இருந்த இந்திய இராணுவத்தைத் தமிழர்களின் கொலையாளி என வர்ணித்தார்.

இலங்கையில் இருந்து நாடு திரும்பிய இந்தியப்படையினர் சென்னைத் துறைமுகம் வந்தடைந்த போது அவர்களை வரவேற்க கருணாநிதி செல்லாதது அவர் செய்த சரியான செயலேயாகும். ஆனால் அதே கருணாநிதி தற்போது தமது சொந்த நலன்களுக்காக தமிழர்களுக்கு ஆதரவான பாதையில் இருந்து விலகிச்செல்கிறார் என்றும் கோபாலசாமி கூறினார்.

## இந்தியா மீது புனிதப் போர் தொடுக்க வேண்டும்!

### பாகிஸ்தான் அதிகாரி தெரிவிப்பு

இஸ்லாமபாத், நவ. 8

காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காண இந்தியா மீது புனிதப் போர் தொடுக்க பாகிஸ்தான் தயாராக இருக்க வேண்டும்.

பாகிஸ்தானின் உளவுத் துறை அமைப்பான ஐ.எஸ்.ஐ.யின் முன்னாள் தலைவர் லெப்டினன்ட் ஜெனரல் ஹமீட்குல் இவ்வாறு கூறியுள்ளார்.

காஷ்மீர் மீதான ஐ.நா. சபையின் தீர்மானங்களுக்கு இந்தியா தொடர்ந்து மதிப்பளிக்க மறுத்து வருவதால் அந்தப் பிரச்சினைக்கு ஒரே தீர்வு 'ஜிகாத்' எனப்படும் புனிதப் போர்தான்.

— இவ்வாறு அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

## இஷாக்கான் போட்டியிடார்

இஸ்லாமபாத், நவ. 8

இம்மாதம் 13 ஆம் திகதி நடைபெறவுள்ள பாகிஸ்தான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து முன்னாள் ஜனாதிபதி குலாம் இஷாக்கான் விலகிக்கொண்டு விட்டார்.

## புதைக்கப்பட்ட நிலையில் 10 கோடி நிலக் கண்ணிகள்

லண்டன், நவ. 8

உலகம் முழுவதும் 10 கோடிக்கு அதிகமான நிலக்கண்ணிகள் வெடிக்காத நிலையில் புதைத்து வைக்கப்பட்டுள்ளன.

மனித உரிமைகள் கண்காணிப்புக் குழு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

கண்டுபிடிக்கப்படாத நிலையில் உள்ள இந்த நிலக் கண்ணிகளில் சிக்கி வாரம் சராசரி 150 பேர் உயிரிழப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவங்கள் கம்போடியா, அங்கோலா, ஆப்கனிஸ்தான், மொஸாம்பிக் ஆகிய நாடுகளில் தான் தினமும் இடம் பெறுவதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நிலக்கண்ணிகளைத் தயாரிக்கும் 48 உற்பத்தி நிறுவனங்களை கண்காணிப்புக் குழு அடையாளங் கண்டுள்ளது. நிலக் கண்ணிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பிரதான நாடுகளாக முன்னாள் சோவியத் குடியரசுகளும் சீனாவும் இருந்து வருகின்றன என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

## பம்பாய் குண்டுவெடிப்பு; 189 பேர் மீது வழக்கு

பம்பாய், நவ. 8

கடந்த மார்ச் மாதம் பம்பாயில் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பாக சிறப்பு புலனாய்வுப் பொலீஸார் 189 பேர் மீது குற்றப் பத்திரிகைகளைத் தாக்கல் செய்துள்ளனர்.

இவர்களில் ஒருவர், பம்பாய் தெற்கு தொகுதி காங்கிரஸ் எம்.பியான சுனில் தத்தின் புதல்வனும் பிரபல இந்தி நடிகருமான சஞ்சய் தத் ஆவார்.

இக் குண்டு வெடிப்புச் சம்பவங்களின் முக்கிய சூத்திரதாரி என வர்ணிக்கப்படுபவரும் தற்போது வெளிநாட்டில் தலைமறைவாகி இருக்கும் இப்ராஹிம் தாவூத் முதலாவது குற்றவாளியாக வழக்கில் காட்டப்பட்டுள்ளார்.

இக்குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் எதிரிகளுக்கு ஆகக் கூடியது மரண தண்டனையும் விதிக்கப்படலாம். குற்றப்பத்திரிகை 9 ஆயிரத்து 392 பக்கங்களைக் கொண்டதாகும்.

இவ்வழக்கு விசாரணை எதிர்வரும் ஜனவரி 3ஆம் திகதி ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

## சைவப் பெருஞ்சயிலம் சரிந்ததுவோ?

சைவசித் தாந்தமொடு செந்தமிழ் பக்திமலை
சாய்ந்தே சரிந்ததுவோ?
சங்கீதத் திருப்புகழைச் சந்ததம் சந்தமொடு
சாற்றியபிர சங்கமலை
சமஸ்கிருத நூலாய்ந்து சங்கத்த மிழ்இனிக்கும்
சர்க்கரைத் தேன்கலந்தே
சன்மார்க்க தெய்வீக நெறியூட்டி வழிகாட்டி
சாத்வீகச் சிந்தையூட்டி
வையகத் தாரென்றும் வாழ்வாங்கு வாழ்ந்திட
வார்த்தைதித் திக்கத்தந்தே
வளமார்ந்த வண்டமிழ்க் கடலென்னும் மாபெரும்
வள்ளல்கிரு பானந்தவாரி
வாயாரப் பொழிகின்ற தேனான செந்தமிழ்
வானவர்க் கோதச்சென்றாரோ?
வாரிமெனப் புராணமொடு இதிகாசப் பிரசங்கம்
வழங்கிடவிண் சென்றிட்டாரோ?
கையகந் தன்னிலே கனத்திடும் தாளமும்
கழுத்திலக் குமணிமாலை
கவினொழுகு வீபூதி தரித்ததிரு மேனியும்
களிப்புமிகு முறுவலுடனே
கச்சிதப் பதினெட்டுப் புராணப்பிர சங்கமும்
காசினியில் தருமாமலை
கச்சியப் பர்தரும் கந்தபு ராணமும்
கன்னலிலக் கியத்தமிழும்
ஐயமே திலாது ஆத்மீகப் பிரசங்க
ஐயன்கிரு பானந்தவாரி
அரனவன் அடியிணை அடைந்தனன் பெறும்பேறு
ஆன்மீக முத்திபெற்றார்
அவனியிலே சைவசித் தாந்தப் பெருஞ்சயிலம்
அசையாது வீழ்ந்ததம்மா!
ஆற்றுவாரின்றிமனம் தேற்றிலோம் என்செய்வோம்
ஆண்டவனின் நியதிஇதுவோ?
அருந்தமிழ்க்கிருபா னந்தவா ரியாரின்
ஆத்மா பெறுக சாந்தி

- கவிமாமணி ந. வீரமணிஐயர்

## போர்க்கால...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படைப்புத் தளமாக அமைகிறது. வாழ்வின் புறநிலை உண்மைகளை மூலப் பொருளாக எடுத்துக் கலைப் பொருள் படைப்பவரே சிறந்த கலைஞன்.

புதுவை அண்ணா என நாம் அன்பாக அழைக்கும் புதுவை இரத்தினதுரை ஒரு சிறந்த கலைஞர்.

அவர் இந்த மண்ணைக் காதலிப்பவர்; இந்த மண்ணின் மக்களை நேசிப்பவர்; இந்த மண்ணின் விடுதலையை இலட்சியமாக வரித்துக் கொண்டவர். மண், மக்கள், விடுதலை என்ற முப்பொருளை மூலப்பொருளாக எடுத்து கலைப்பொருள் படைப்பவர். கவிதை அவரது கலைப்பொருள். அந்தக் கலையில் அவருக்கு இங்கு எவரும் நிகரில்லை.

புதுவை இரத்தினதுரையின் கவிதையில் ஒரு புதுமை இருக்கிறது; அழகும் ஆழமும் இருக்கிறது; ஓர் இசை இருக்கிறது; ஓர் ஈர்ப்பு சக்தி இருக்கிறது.

### கவிதை வீச்சு

இந்தத் தேசத்தின் பண்பாட்டு மரபில் ஆழவேரோடி நிற்பதால் அவரது கவிதைக்கு அலாதியான வீச்சும், வலிமையும் உண்டு. சதையும் இரத்தமுமாக இந்த மண்ணின் பண்பாட்டுப் படிமங்கள் அவரது கவிதைக்கு உயிர்வடிவம் கொடுக்கும்.

மனித அவலங்களையும் ஏக்கங்களையும் படிமக் காட்சிகளாகச் சித்திரித்து, இனவாதக் கொடூரத்தின் அராஜகத்தை அழுத்தமாக உணர்த்திக் காட்டுவதுடன் ஒடுக்குமுறைக்கு எதிரான ஆவேசமிக்க கொதிப்புணர்வையும் அவரது கவிதை தட்டி எழுப்புகிறது.

### உந்து சக்தி

புதுவை இரத்தினதுரையின் படைப்பிலக்கியம் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு ஓர் உந்து சக்தியாக இருக்கிறது. கவிதை உலகில், போர்க்கால இலக்கியத்திற்கு இலக்கணம் வகுத்துக் கொடுத்த பெருமை அவரைச் சாரும். அவரது இலக்கியப் பணியின் முக்கியத்துவமும் இதில்தான் தங்கி இருக்கிறது.

எமது தேசத்தின் போராட்ட வாழ்வையும் வரலாற்றையும் தமிழீழ இலக்கிய இயக்கத்திற்குள் முதன்மைப்படுத்தி, தமிழ்த்தேசிய பிரக்ஞையை விழிப்புறச் செய்ததில் அவரது பங்கு கணிசமானது. விடுதலைக்காக ஏங்கும் தமிழினத்தின் ஆன்ம தாகமாக வெளிப்பாடு காணும் அவரது கவிதை போர்க்கால இலக்கியத்திற்கு புதுமையும் செழுமையும் கொடுக்கிறது.

புதுவை இரத்தினதுரை இலக்கியப் படைப்பாளியாக மட்டுமன்றி, ஓர் இலட்சியப் போராளியாகவும் எமது விடுதலை இயக்கத்தில் இணைந்து நிற்பவர். இலக்கியப் படைப்பிலும், இலட்சியப் பயணத்திலும் அவரது பணி சிறப்புடன் தொடர எமது நல்லாசிகள். — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-111)

## பொருள்கள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை—

வவுனியா தாண்டிக்குளம் தடை முகாமில் மக்களுக்கு சாத்தியமான அளவு சிரமத்தைக் குறைத்து சோதனைகளை மேற்கொள்ளும்படி படையினரை பாதுகாப்பு அமைச்சு பணித்துள்ளதாக கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

வட பகுதி மக்கள் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாட வசதியாக அவர்கள் அதிகஅளவு உணவுப் பொருள்களை எடுத்துச் செல்ல அனுமதிக்கும்படியும் பாதுகாப்பு அமைச்சின் பணிப்புரையில் கூறப்பட்டுள்ளது என்று அப் பத்திரிகை தெரிவித்துள்ளது. (உ-எ)

# உருளைக் கிழங்குச் செய்கையில் பின்பற்ற வேண்டிய முறைகள்

இப்போது உருளைக் கிழங்கு நடுகை செய்யும் பருவகாலம். கிழங்குச் செய்கையில் அதிக வருமானம் பெற கடைப்பிடிக்க வேண்டிய பராமரிப்பு முறைகளை இக் கட்டுரை விவரிக்கிறது.

### நடுகை

கிழங்குகளை வெளிச்சம் குறைந்த அறையில் மணலில் பரவி 7 முதல் 14 நாட்களுக்கு விட்டு முளை பெயர்தலுக்கு வகை செய்தல் வேண்டும்.

30-45 மி. மீ. விட்டமுள்ள கிழங்குகள் ஒவ்வொன்றும் 4—5 முளைகள் (1.0—1.5 ச. மீ. நீளமுடையவை) இருப்பது சிறந்தது.

சென்ற வருடத்தில் உருளைக்கிழங்கு பயிரிடப்படாததும் மற்றும் சொலனேசியே குடும்பப் பயிர்களான மிளகாய், கத்தரி, தக்காளி, புகையிலை என்பன கடந்த சில போகங்களில் பயிர்செய்யப்படாததுமான தோட்டங்கள் தெரிவுசெய்யப்படுவது விரும்பத்தக்கது.

அரை ஏக்கருக்கு (2 ஆயிரம் கண்டுத்தரை) சுமார் 7 முதல் 8 வண்டில் கொள்ளளவு நன்றாக உக்கிய எருவைப் பரப்பி உழவு செய்தல் வேண்டும். உழுது தூர்வையாக்கப்பட்ட தரையில் வரம்புசால்கள் அமைத்தல் வேண்டும். சால்கள் 10 ச. மீ. ஆழமும் 60 ச. மீ. அகலமும் உடையதாயிருத்தல் நல்லது. சால்களில் அடிக்கட்டாக 50 கிலோ அமோனியம் சல்பேற், 50 கிலோ முக்கூட்டு சுப்பர்பொஸ்பேற், 15 கிலோ பொற்றாஸ் பசளைகளை மண்ணுடன் கலந்து விடுதல் வேண்டும்.

நடுகை செய்து 3 முதல் 4 வாரங்களில் மேற்கட்டாக 50 கிலோ அமோனியம், 15 கிலோ பொற்றாஸ் பசளை இடுதல் சிறந்தது.

பசுந்தாள் பசளையான சணலை உரிய காலத்தில் (ஆடி மாதம் முதலாம், இரண்டாம் வாரத்தில்) பயிராக்கி பூக்கின்ற பருவத்தில் புதைத்து 4 வாரங்களின் பின்னர் (கார்த்திகை 2ஆம் வாரத்தில்) நடுகை மேற்கொள்வதானால் இரசாயன உரப்பாவனை கணிசமாகக் குறைகிறது. அத்துடன் களைகளின் தொல்லையும் குறையும். கார்த்திகை 2ஆம் வாரத்தில் இருந்து மார்கழி 2ஆம் வாரம் வரை நடுகை மேற்கொள்வது சிறந்தது. இக்காலப்பகுதியில் நடுகை மேற்கொள்வதானால் குறைந்த இரவு நேர வெப்பமான 18 பாகை செல்சியஸ் நிலவும். தை—மாசி மாத வாக்கில் கிழங்கு பெரு விளைவு பெறுகிறது.

முளைத்த கிழங்குகளை முளைகள் மேல் நோக்கியிருக்கும்படி சாலில் 25 அல்லது 45 ச. மீ. இடைவெளியில் வைத்து, பின்னர் 2—3 ச. மீ. படை உயர மண்ணால் மூடவேண்டும். வரம்புகளில் இருந்து ஒரு பகுதி மண் விதை கிழங்கை மூடுவதற்கு பாவிக்கும்போது அங்கு ஒரு சாய்வான சால் ஏற்படுகிறது. அச்சாலில் பாசனம் மேற்கொள்ள ஏதுவாகிறது. 2 ஆயிரம் கண்டுத்தரை நடுவதற்கு 400—500 கிலோ விதை கிழங்கு போதுமானது.

### நீர்ப்பாசனம்

மண்ணில் போதிய ஈரம் இருப்பதற்கு ஏதுவாக வரட்சிக் காலத்தில் 3 அல்லது 4 நாட்களுக்கு ஒருமுறை தேவைக்கு ஏற்ப நீர்ப்பாசனம் செய்யலாம்.

### மண் அணைத்தல்

நடுகையின் பின் 3 முதல் 4 வாரங்களில் புருவம் உயர்த்தி பயிரைப் பாதுகாக்க வேண்டும். விளையும் கிழங்கில் சூரிய ஒளி படுவதனால் பச்சை நிறம் ஏற்படுவதைத் தவிர்க்க மண் அணைத்தல் உதவும். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி களைகளையும் அகற்றிவிடலாம்.

### பூச்சித்தாக்கம்

குறிப்பிடத்தக்க சேதமேற்படுத்தும் பூச்சிகள் இப்பயிரில் காணப்படாவிட்டாலும்— சிற்றுண்ணிகள், பனிப்பூச்சி, வெண்ஈ ஆகியவற்றின் தாக்கங்களை அவதானித்து கட்டுப்படுத்த வேண்டும். அண்மைக்காலத்தில் இலைத் தத்திகளின் தாக்கம் சில பயிர்களில் காணப்பட்டது. ... கிழங்கிலும் இத்தாக்கம் ஏற்படக்கூடுமாதலால் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

சிற்றுண்ணிகள் வெப்பமான கால நிலையில் புதிதாகத் தோன்றும் இலைகளின் கீழ்ப் பக்கத்தில் இருந்து சேதமேற்படுத்துகின்றன. பாதித்த இலைகள் மினுமினுப்பாகவும் பழுப்பு நிறமுடையதாகவும் காணப்படும். அத்துடன் இலைகளின் தோற்றம் மாறுபட்டும் வளர்ச்சி குன்றியும் இருக்கும். சிற்றுண்ணிகளைச் சேத ஆரம்பத்தில் இருந்து கட்டுப்படுத்துதல் சிறந்தது. 80—85% நனையும் கந்தகத்தூளை ஒரு லீற்றர் நீருக்கு 7 கிராம் என்ற வீதத்தில் கலந்து விசிறுதல் வேண்டும். தெளிக்கும் காலத்தில் மழை இருப்பின் இலைகளில் பீடைநாசனி ஒட்டிப்பிடிக்கக்கூடிய (ஸ்ரிக்கர்) பதார்த்தம் ஒன்றுடன் (12 லீற்றர் கரைசலுக்கு 30 மில்லி லீற்றர் என்ற அளவில்) கலந்து தெளிப்பது சிறந்தது. கந்தகக் கரைசல் இலைகளின் கீழ்ப்பக்கம் நன்றாக நனைய தெளித்தல் வேண்டும். தெளிகருவிப் பீச்சு முனையில் இருந்து வெளியேறும் கலவை மிகவும் சிறிய துளிகளாக இருப்பது சிறந்தது.

பனிப்பூச்சி மற்றும் வெண்ஈக்களின் தாக்கம் இருப்பின் பொமேதயன் (அன்தியோ) 33% செறிகுழம்பு அல்லது பைறிபொஸ் மீனதல் (அக்ரெலிக்) 50% செறிகுழம்பு ஆகியவற்றில் ஒன்றை ஒரு லீற்றர் நீருக்கு 3 மில்லி லீற்றர் என்ற அளவில் கலந்து கரைசல் இலைகளின் இரு பக்கங்களும் நன்றாக நனையும்படி தெளிக்க வேண்டும்.

இலைத் தத்திகளை "ரெபோன்" இரவ பீடைநாசனி மூலம் கட்டுப்படுத்த வேண்டும். ரெபோன் 10% செறிகுழம்பாகச் சந்தைப் படுத்தப்படுகிறது. இதன் ரசாயனப் பெயர் ஈதோபென் [illegible] லீற்றர் நீருக்கு 30 மில்லி லீற்றர் என்ற அளவில் இலைகளின் கீழ்ப்பகுதி நன்றாக நனையும்படி தெளிக்க வேண்டும்.

எறும்புத் தொல்லையைப் போக்க குளோர் பைரிபொஸ் (லோர்ஸ்பான்) 20% செறிகுழம்பினை 100 சதுர மீற்றர் பரப்பிற்கு 40 மில்லி என்ற அளவில் கலந்து தெளித்தல் வேண்டும்.

### நோய்கள்

பூஞ்சண நோய்களான பிற்கூற்று வெளிறல், முற்கூற்று வெளிறல் மற்றும் பற்றீரிய வாடல் நோய் என்பன முக்கியமானவை.

### பிற்கூற்று வெளிறல்

பொதுவாக கிழங்கு தோன்றும் பருவத்தில் ஏற்படும் இந்நோய் இலைகள், தண்டுகள் மற்றும் கிழங்குகளைத் தாக்குகின்றன. பாதிக்கப்பட்ட இலைகளில் நீர்ப்புள்ளிகள் விரிந்து கபில அல்லது ஊதா நிறமாகக் காணப்படும். குளிர், ஈரலிப்பு நிறைந்த இரவுகளும் அதனைத் தொடர்ந்து வெப்பமான பகலும் இந்நோய் தீவிரமடைய காரணமாகின்றது.

மன்கோசெப் (டைதேன் M - 45 அல்லது வன்டசெப் நனையும் தூள்). அன்திறக்கோல், மனெப் அல்லது மெற்றலக்சில் அடங்கிய பூஞ்சண நாசனிகளில் ஒன்றைத் தெளித்துக் கட்டுப்படுத்தலாம். 20 கிராம் தூளை 10 லீற்றர் நீரில் கலந்து 7 முதல் 10 நாட்களுக்கு ஒரு முறை தெளித்துக் கட்டுப்படுத்த வேண்டும்.

### முற்கூற்று வெளிறல்

இலைகளில் சிதறலாகத் தோன்றும் சிறிய கபில நிறப் புள்ளிகள் பருமன் அடைந்து ஒழுங்கீனமானதும் ஒரே மையமுடைய தோற்றமுள்ளதுமான கருங்கோடுகளாகக் காணப்படும்.

கப்ரான் அல்லது மன்கோசெப் கொண்டு கட்டுப்படுத்த வேண்டும். இலைகளுக்குப் பாதுகாப்பளிக்கும் பங்கசு கொல்லி நாசனி 20 கிராம் தூளை 10 லீற்றர் நீரில் கரைத்து 6 முதல் 8 நாட்களுக்கு ஒருமுறை தெளிக்க வேண்டும்.

### பற்றீரியா வாடல் நோய்:

இலைகள், தண்டுகள் சோர்ந்து, பயிர் வளர்ச்சி குன்றி, மஞ்சள் திறமாகக் காணப்படும். மிகவும் குறுகிய காலத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் இந்நோயை இலகுவில் இனங்காணலாம். இதனைக் கட்டுப்படுத்த நல்ல நீர் வடிமானம் தேவை. இந்நோயினால் பாதிக்கப்பட்ட பயிரை உடனே அகற்றி விட வேண்டும். பயிர் இருந்த இடம் தனிமைப் படுத்தப்பட வேண்டும். அதனால் பாசனம் செல்லாது கண்காணிக்க வேண்டும். மண் அணைப்பது, களைகளை அகற்றுவது போன்ற சமயங்களில் தண்டு, கிளைகள், இலைகள், கிழங்கு போன்ற உறுப்புக்களில் காயங்கள் ஏற்படுத்தக் கூடாது. காயங்கள் ஏற்படின் அவற்றின் ஊடாக தரை மற்றும் பாசன நீரில் உள்ள பங்கசு மற்றும் பற்றீரியா உட்சென்று நோய் இலகுவில் ஏற்பட வாய்ப்பு உண்டு. பராமரிப்பு முறைகளைத் தொடர்ந்து பங்கசு நோய்களைக் கட்டுப்படுத்த சிபார்சு செய்யப்பட்ட பங்கசு நாசனி ஒன்றை விசிற வேண்டும்.

நோய்களைக் கட்டுப்படுத்த பயிர்ச் சுகாதாரம் பேணுவது இன்றியமையாததாகும்.

### அறுவடை

கிழங்குகளில் கூடிய எடையும் கடினமான தோலும் இருப்பது முதிர்ச்சிக்கு அறிகுறியாகும். பயிர் முதிர்ச்சி அடைவதை அவதானித்து அறுவடைசெய்ய வேண்டும். அறுவடையின் போதும் பின்னர் கிழங்குகளை எடுத்துச் செல்லும் போதும் அவை சேதமடையாது பார்க்க வேண்டும். நோயுற்ற கிழங்குகளை தனியாகக் களஞ்சியப்படுத்த வேண்டும்.

### விளைச்சல்

நன்றாக பராமரிப்பு மேற்கொள்ளப்படும் போது ஏக்கருக்கு 6-10 தொன் விளைவு கிடைக்கிறது.

### பொருளாதாரம்

உற்பத்திச் செலவில் பெரும் பகுதி விதை கிழங்கு (56%). உரம், எரு, கம ரசாயனங்களுக்கு (25%) ஏற்படுகிறது. எஞ்சிய 19% இல் கூலி, பாசனம் மற்றும் செலவுகளும் அடங்கும். சாதாரணமாக 2 ஆயிரம் கண்டுத்தரை (அரை ஏக்கர்) யில் 3 தொன் கிழங்கை விளைவாகப் பெற்று கிலோ 45 ரூபாவாகச் சந்தைப்படுத்தும் போது சுமார் 83 ஆயிரம் ரூபாவை தேறிய வருமானமாகப் பெறலாம். ★

ச. பொன்னுத்துரை
(விவசாய ஆராய்ச்சிப் பொறுப்பதிகாரி)
விவசாய ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு நிகழ்வு

யாழ். கல்வித்திணைக்களம் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையில் நடத்தி வரும் உதைபந்தாட்டப் போட்டித்தொடரின் மாவட்ட நிலைப் போட்டிகளில் இன்று பிற்பகல் 2-30 மணி முதல் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் பாடசாலை அணிகள் வருமாறு:-

யாழ். பல்கலைக்கழக மைதானத்தில்

★ கனகரத்தினம் ம.ம.வி. எதிர் நடேஸ்வரா — 19 வயதுப் பிரிவு.

★ எழுதுமட்டுவாள் கணேசா எதிர் சென். சாள்ஸ் — 19 வயதுப் பிரிவு

சென். ஜோன்ஸில்

★ நாவாந்துறை றோ. க. பா. எதிர் யாழ். மத்திய கல்லூரி — 19 வயதுப் பிரிவு.

★ ஏழாலை ஸ்ரீ முருகன் எதிர் சென். ஹென்றீஸ் — 19 வயதுப் பிரிவு.

யாழ். இந்துவில்

★ சென். ஜேம்ஸ் எதிர் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா ம. வி. (உ)

## இன்று

இளைப்பாறிய அதிபர் திரு. செ. சோதிப்பெருமாளின் பாராட்டு மலர் வெளியீட்டு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரி கனிஷ்ட பிரிவு நடேசர் மண்டபத்தில் நடைபெறும். (த)

★ ★ ★

பருத்தித்துறை வை. எம். சி. ஏயின் அனுசரணையுடன் நெல்லியடி மெதடிஸ்த திருச்சபை ஏற்பாடு செய்துள்ள சொற்பொழிவு இன்று திங்கள் பிற்பகல் 4 மணிக்கு மெதடிஸ்த நிலையத்தில் நடைபெறும்.

''இன்றைய சூழலில் தலைமைத்துவப் பணி'' என்ற பொருளில் வைத்திய கலாநிதி ரி. ஜெயக்குலராஜா சொற்பொழிவாற்றுவார். (த-155)

★ ★ ★

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தேநீர்ச்சாலை உணவு விடுதிகள், பேக்கரிகள் நடத்துபவர்களுக்கான சுத்தம் சுகாதாரம் பேணுதல் பற்றிய கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு சாவகச்சேரி நகரசபை சபா மண்டபத்தில் நகரசபை செயலாளர் த. நவரத்தினராசா தலைமையில் நடைபெறும்.

## நாளை

பாலர் கல்வி தொடர்பான கருத்துக்களை பெறும் நோக்கத்துடன் — சங்கானை, சண்டிலிப்பாய் பகுதிகளில் உள்ள பாலர் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களைக் கொண்ட 30 பேர் அடங்கிய குழுவினருடனான சந்திப்பு நாளை காலை 10 மணிக்கு சங்கானை போரூட் அலுவலகத்தில் நடைபெறும். (த-162)

## கிளாலியில் மோதல்

யாழ்ப்பாணம், நவ. 8

நேற்று முன்தினம் இரவு — கிளாலி — பூநகரி படகுச் சேவை இடம்பெற்ற வேளை — பூநகரிப் பகுதியில் இருந்து படையினர் பீரங்கித் தாக்குதலை நடத்தினர்.

இரவு 7 மணி முதல் 9 மணி வரைபடையினர் தாக்குதல் நடத்திய போதும் படகுப் போக்குவரத்து தடங்கலின்றி நடைபெற்றது.

இதேவேளை — நேற்று அதிகாலை 4 மணியளவில் கிளாலி கடற்பகுதியில் ஆலங்கேணிப் பக்கமாக கடற் புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையே மோதல் இடம்பெற்றதாகத் தெரிய வந்தது. (உ-15-117)

# அனுராவுக்கு எம். பி. பதவி: கட்சி செயலர் அறிவிப்பு

கொழும்பு, நவ. 8

அனுரா பண்டாரநாயக்கா ஐ.தே.கவின் தேசியப்பட்டியலில் எம். பியாக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று ஐக்கிய தேசியக் கட்சிப் பொதுச் செயலாளர் சிறிசேன கூரே தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்துள்ளார்.

இதற்கிடையில் —

ஐ. தே. கவை ஆதரிக்கும் தமது பிரசார இயக்கத்தை ஹொரகொல்லையில் இருந்து ஆரம்பிக்க அனுரா முடிவு செய்திருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

# சிறிமா, சந்திரிக்காவுக்கும் ஐ. தே. கவில் சேர அழைப்பு

## பிரதமர் ரணில் விடுக்கிறார்

கொழும்பு, நவ. 8

அனுராவைப் பின் பற்றி அவரது தாயார் சிறிமாவும் சகோதரி சந்திரிகா குமாரணதுங்காவும் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்து கொள்ள முன் வரவேண்டும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இவ்வாறு அழைப்பு விடுத்திருக்கிறார்.

சுதந்திரக் கட்சி பலவீனப்பட்டு விட்டது. அதற்கு எதிர்காலமே இல்லை என்றும் அவர் கூறினார். (உ-எ)

# தலைமைப் பதவி தந்தாலும் சு. கவில் சேரமாட்டேன்!

## இப்படிக் கூறுகிறார் அனுரா

கொழும்பு, நவ.8

தலைமைப் பதவியைத் தந்தால் கூட சுதந்திரக் கட்சியில் மீண்டும் நான் சேரப் போவதில்லை.

அனுரா பண்டாரநாயக்கா தமது ரோஸ்மீட் வாசஸ்தலத்தில் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் பேசிய போது முன்கண்டவாறு தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சி இடது சாரித்துவத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. விரைவில் அக்கட்சியை மக்கள் மறந்து விடுவார்கள் என்றும் அவர் கூறினார்.

''தேர்தல் பிரசாரத்தின் போது எனது தாயார் மீது தனிப்பட்ட ரீதியில் தாக்கிப் பேச மாட்டேன் அம்மாவும் அப்படியே செய்வார் என்று நம்புகின்றேன்'' — என்றும் அவர் சொன்னார்.

# அனுரா வெளியேறியது ஒரு வரப்பிரசாதம்!

## சு. கவில் ஒரு பிரிவினர் கருத்து

கொழும்பு, நவ. 3

அனுரா பண்டாரநாயக்கா சுதந்திரக் கட்சியில் இருந்து வெளியேறியதை பதுளை, மொனறாகலை, மாத்தறை, காலி முதலான பகுதிகளில் உள்ள சுதந்திரக்கட்சியினர் ஒரு வரப்பிரசாதமாகக் கருதுகிறார்கள்.

பி. பி. ஸி. செய்தியாளர் எல்மோ பெர்னாண்டோ முன்கண்டவாறு தெரிவித்தார்.

தலைமைப்பதவி போட்டி இன்றி சுதந்திரக்கட்சியினர் ஒரே அணியில் நின்று செயற்படும் வாய்ப்பு அனுராவின் ராஜினாமாவால் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியில் அனுரா சேர்ந்த கையோடு அரசு துரிதமாகத் தேர்தலை நடத்தி சுதந்திரக்கட்சியை தோற்கடிக்கும் உத்தியைக் கடைப்பிடிக்கவிருப்பதாக அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். (ஒ-எ-6)

## இன்று ஆரம்பமாகும்:

# தமிழீழ பொதுக் கல்வி விசேட தேர்வு விவரம்

யாழ்ப்பாணம், நவ. 8

தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வுக்குத் தோற்றமுடியாத அச்சுவேலி, புத்தூர், பளை, கொடிகாமம், வரணி, உசன், சாவகச்சேரி, மட்டுவில் கொத்தணிகளின் பாடசாலை மாணவர்களுக்கு இன்று திங்கட்கிழமை தொடக்கம் விசேட தேர்வு நடைபெறும்.

மட்டுவில் ம. வி. சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி.,சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவர்களுக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்திலும்—

சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவர்களுக்கு அதே பாடசாலை மண்டபத்திலும்—

சாவகச்சேரி றிபேக் கல்லூரி மாணவர்களுக்கு அதே பாடசாலை மண்டபத்திலும்—

கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம், வரணி கொத்தணிப் பாடசாலை, மீசாலை வீரசிங்கம் வித்தியாலயம், விக்னேஸ்வர வித்தியாலயம் ஆகியவற்றின் மாணவர்களுக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்திலும்—

அச்சுவேலி, புத்தூர் கொத்தணி மாணவர்களுக்கு புத்தூர் சோமஸ்கந்த வித்தியாலயத்திலும்—

மற்றும் பளை மகாவித்தியாலயத்திலும், வேம்பொடுகேணி பாடசாலையிலும் தேர்வுகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-க)

# யாழ். இந்து, வேம்படி ஆசிரிய வெற்றிடங்கள்

## தகுதியான ஆசிரியர் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், நவ.8

பதினொரு தேசிய பாடசாலைகளில் உள்ள 123 ஆசிரிய வெற்றிடங்களுக்கு தகுதியான ஆசிரியர்களை விண்ணப்பிக்கும்படி கல்விச் சேவைச் சபை கேட்டிருக்கிறது.

விண்ணப்பங்கள் கல்லூரி அதிபர், கோட்டக் கல்வி அதிகாரி மற்றும் மாகாணக் கல்விச் செயலாளர் ஆகியோரூடாக எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் கல்விச் சேவைச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்படிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ள இரு தேசிய பாடசாலைகளில் ஏற்பட்டிருக்கும் வெற்றிடங்கள் வருமாறு:-

யாழ். இந்து

★ கலைப்பட்டதாரி — 02
★ வர்த்தகப்பட்டதாரி — 01
★ விஞ்ஞானம் — [illegible]
★ கணிதம் — 01
★ அழகியற் கல்வி — 01
★ மரவேலை / உலோக வேலை — 01
★ உடற்கல்வி — 01

வேம்படி மகளிர்

★ ஆரம்பநெறி — 01
★ விஞ்ஞானம் — 05
★ கணிதம் — 01
★ சங்கீதம் — 01
★ தமிழ் — 01

(உ-3)

## கடத்தல் முயற்சி; சிப்பாய் கைது!

யாழ்ப்பாணம், நவ. 8

கடத்தல் பொருள்கள் சிலவற்றைக் கடற்படை வாகனம் ஒன்றில் கடத்திச் செல்ல முயன்ற கடற்படைச் சிப்பாய் ஒருவரும் அந்த வாகனத்தின் சாரதியும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர். ராகமவில் நேற்று முன்தினம் இரவு இச் சம்பவம் இடம் [illegible]

# கோப்ரலை சுட்டுக்கொன்ற சிப்பாய்

கொழும்பு, நவ. 9

ஆனையிறவு- இயக்கச்சி இராணுவ முகாமில் இரு சிப்பாய்களிடையே அண்மையில் ஏற்பட்ட வாக்குவாதம் துப்பாக்கிச் சூட்டில் முடிவடைந்தது என்றும் —

அந்தச் சம்பவத்தில் கோப்ரல் ஹேமச்சந்திர என்பவர் மற்ற சிப்பாயால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்றும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-5)

## காங்கேசன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வதற்கான சில வழிமுறைகளை தாம் அமைச்சரிடம் கூறியதாக திரு நடராசா உதயனுக்குத் தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது;-

சிமெந்து ஆலையை மூடி தொழிலாளர்களை வேலையில் இருந்து நீக்குவதென்று முன்னர் எடுக்கப்பட்ட முடிவு தற்சமயம் மாற்றப்பட்டுள்ளது.

தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்க கூட்டுத்தாபனம் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் சில ஆலோசனைகளை சமர்ப்பித்துள்ளோம்.

காங்கேசன்துறை ஆலையில் உள்ள கிளிங்கரை எடுத்து விற்பதன் மூலமும், தொழிற்சாலைக்கென வந்துள்ள இயந்திரங்களை வேறு கூட்டுத்தாபனங்களுக்கு வாடகைக்கு வழங்குவதன் மூலமும் சம்பளம் வழங்குவதற்குரிய பணத்தைப் பெறமுடியும் என்று ஆலோசனை தெரிவித்துள்ளோம்—என்றார். (அ-3)

## அனுரா ஆதரவாளர்களான

# சு. கவின் 8 எம். பிக்கள் சுயேச்சை குழு அமைப்பர்

## மற்றும் மூவர் ஐ.தே.கவுக்கு!

கொழும்பு, நவ. 8

அனுரா பண்டாரநாயக்காவின் ஆதரவாளர்களான, சுதந்திரக்கட்சி எம். பிக்கள் எட்டுப்பேர் கட்சியை விட்டு விலகாமல் இருந்துகொண்டு சுயேச்சை அரசியல் குழு ஒன்றை அமைக்க முடிவு செய்துள்ளனர்.

அதேவேளை —

அனுரா ஆதரவாளர்களான மற்றும் மூன்று எம். பிக்கள் சுதந்திரக் கட்சியை விட்டு விலகி, ஐ. தே. கவில் சேரவுள்ளனர்.

கொழும்பு அரசியல் வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

தனி அரசியல் குழு ஒன்றை அமைப்பது என்ற முடிவு, அனுரா சுதந்திரக் கட்சியில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டபோது அவருக்கு ஆதரவான எம்.பிக்களினால் எடுக்கப்பட்டது என்றும் —

அனுரா ஐக்கியதேசியக் கட்சியில் சேர்ந்த பின்னர் இந்த எம். பிக்கள் கடந்த வாரம் மீண்டும் சந்தித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அச்சந்திப்பின்போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், அவர்களில் சிரேஷ்ட எம். பி. ஒருவர், மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனாவையும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் காமினி திஸநாயக்காவையும் சந்தித்து, அவர்களின் கட்சிகளுடன் கூட்டு அமைப்பது பற்றி பேச்சுகள் நடத்தினார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அனுரா ஆதரவு எம்.பிக்கள் தற்போதைய நிலையில் சுதந்திரக் கட்சியை விட்டு வெளியேறமாட்டார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

''நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் அல்லது கட்சியை விட்டு விலகினாலும் எம்.பி. பதவி பறிபோகாமல் இருக்க வழி செய்யும் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்னர் நாம் சுதந்திரக் கட்சியை விட்டு வெளியேறுவோம்''— என்று அனுரா ஆதரவு எம்.பி. ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை—

அனுரா ஆதரவாளர்களான பிரதீப் கப்பன்கம, எஸ். எல். குணசேகரா, ஜினதாஸ நியதபால, லயனல் ராஜபக்ஷ, ஜகத் மகேந்திர அதிகாரி, ஹலீம் இஷாக் ஆகிய சுதந்திரக்கட்சியின் ஆறு எம்.பிக்களும் அனுராவைப் பின்பற்றி ஐ. தே. கவில் சேருவர் என்று சிங்கள வார இதழ் ஒன்று ஊகம் தெரிவித்திருக்கிறது. (உ-எ-9)

## பாடசாலைகளில்

கோண்டாவில் சி. சி. த. க. பாடசாலை பெற்றோர் தின விழாவும் பரிசளிப்பும் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் இ. சிவபாதசேகரம் தலைமையில் நடைபெறும். (த-111)


விவசாயிகளே!

தொழிற்சாலை உரிமையாளர்களே!

இயந்திரப் பாவனையாளர்களே!

எங்கள் வளங்களில் எங்கள் கைகளில்
பெற்றோலிய எரிபொருள் பிரச்சினைக்கான
குறைந்த செலவில் மாற்றீடாக வருகின்றது.



உங்கள்

* நீரிறைக்கும் இயந்திரங்களை இயக்க
* மின் பிறப்பாக்கியை இயக்க

மரக்கரி அல்லது சிரட்டைக்கரி மட்டுமே கொண்டு சக்தியை தரவல்லது தான்

ஆக்கிவாயு பிறப்பாக்கி

(தமிழீழத்தில் தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டது)

இரகசியம் ஒன்றும் இல்லை

ஆக்கி வாயுப் பிறப்பாக்கிகள் உங்களின் சக்தித் தேவைகளில் பெருமளவை நிறைவேற்ற வல்லன. இவை சிரட்டை, மர கரிகளிலிருந்து உங்கள் பெற்றோல், மண்ணெண்ணெய், டீசல் இயந்திரங்களை இயக்க வல்ல ஆக்கி வாயுவை உற்பத்தி செய்கின்றன.

★ உங்கள் இயந்திரத்தில் எதுவித மாற்றமும் செய்யாமலேயே ஆக்கிவாயுப் பிறப்பாக்கிகளை இணைத்து இயக்க முடியும்.

முதற்கட்டமாக ஆல்சிலி (Wolseley) இயந்திரங்களுக்குப் பொருத்திக் கொள்ளலாம்.

பொருத்த வேண்டுமாயின் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்

எல்லா நாட்களிலும் காலை 10 மணி முதல் பிற்பகல் 2-30 வரை ஆக்கிவாயுவில் இயந்திரம் இயங்குவதை எமது அலுவலகத்தில் பார்வையிடலாம்

எமது அலுவலகம்:

சக்திப் பகுதி,
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
காங்கேசன்துறை வீதி,
தாவடிச் சந்தி, தாவடி.

(சி/6326)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி கணேசபிள்ளை நாகரத்தினம்

திருமதி கணேசபிள்ளை நாகரத்தினம் இந்தியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் நாச்சிமார் கோவிலடி தவில் வித்துவான் கலைமாமணி கணேசபிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், சிவதாஸ், சிவகுமார், சிவனேஸ்வரி, சிவசங்கர், சிவரஞ்சினி, சிவநந்தினி, சிவராம், சிவகாந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ராஜநாதன், சேகர், கண்ணன், சர்வேஸ்வரி, சுந்தரி, சுசி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை (7 - 11 - 93) மாலை 4 மணிக்கு இந்தியாவில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறேன்.

தகவல்:
க. சிவதாஸ்
(மகன்)

நாச்சிமார் கோவிலடி,
தலையாளி.

(27951)

## திருமதி வள்ளிநாயகி தம்பிராசா

இல. 3, செம்மணி வீதி, நல்லூரைச் சேர்ந்த திருமதி வள்ளிநாயகி தம்பிராசா 07-11-1993இல் காலமானார்.

அன்னார் தம்பிராசாவின் அன்பு மனைவியும், சுதாமதி, தயாநிதி (ஆசிரியை, யாழ். வேம்படி மகளிர் கல்லூரி), சந்தானலக்ஷ்மி, பத்மலோஜினி, நந்தகுமார், ஜெயக்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், புத்திசிகாமணி, தவமணி, கோசலப்பிள்ளை, கண்மணி, கமலநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (08-11-1993) திங்கட்கிழமை நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3-00 மணியளவில் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தம்பிராசா (குஞ்சி),
(கணவர்).

இல. 3, செம்மணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

[27944]

## சற்குரு விஸ்வநாதன்

அராலி மேற்கு ஞானியார் கோயில் தர்மகர்த்தா சற்குரு - விஸ்வநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்:- நுகேகொட - சென்ஜோன்ஸ், கோப்பாய் கிறிஸ்தியன் கல்லூரி) (சைவசமய புராண பயன் உரைப்பவர்). சிவபதம் அடைந்து விட்டார். இவர் காலஞ் சென்றவர்களான சாட்குண்ணிய மூர்த்தி, ஏகாம்பரமூர்த்தி (அதிபர்) ஆகியோரின் தந்தையும், கமலாம்பாள், பத்மராணி. (R. M. P.) ஆகியோரின் அன்பு மாமனாரும், தேவரஜனா (விவசாய நிறுவனம், மருதனார் மடம்) கமல மூர்த்தி. (1992ஆம் வருட மாணவன், வட்டு. இந்து கல்லூரி), குருமூர்த்தி, எழிலரசி ஆகியோரின் அன்பு பேரனாரும் ஆவார்.

இவரது ஈமைக்கிரிகைகள். இன்று (8/11/93) பி. ப. 2.00 மணியளவில் குடும்ப மயானத்தில் நடைபெறும்.

தகவல்
சா. கமலாம்பாள்

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.

(27948)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 08 - 11 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org